செ.வெ.எண்: 311 நாள்: 29.05.2019

**புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் தகுதி தேர்வு முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஜூன் 2019 ஆசிரியர் தகுதித் தேர்வு நடைபெற உள்ளதையொட்டி மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (29.5.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆலோசணைக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு ஆசிரியர் தகுதி தேர்வு இடைநிலை ஆசிரியர்களுக்கான தேர்வுத்தாள் I 08.06.2019 அன்றும், பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வுத்தாள் II 09.06.2019 அன்றும் நடைபெற உள்ளது. இத்தேர்வினை புதுக்கோட்டை மாவட்டத்தில் இடைநிலை ஆசிரியர்களுக்கான தேர்வினை 14 மையங்களில் 4,387 தேர்வாளர்களும், பட்டதாரி ஆசிரியர்களுக்கான தேர்வினை 33 மையங்களில் 10,490 தேர்வாளர்களும் எழுத உள்ளனர். மேற்காணும் தேர்வு மையங்களில் தேர்வு எழுதிட விண்ணப்பதாரர்கள் www.trb.tn.nic.in என்ற இணையதளத்தில் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்தேர்வை சிறந்த முறையில் நடத்திட அரசுத்துறை அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக தேர்வு நேரங்களில் தடையில்லா மின்சாரம் வழங்குதல் மற்றும் பேருந்துகள் போதிய அளவில் தேர்வு நாட்களில் இயக்குவதை உறுதி செய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்கள் தேர்வு மையங்களுக்கு எடுத்து சென்று தேர்வு முடிந்ததும் விடைத்தாள்களை பத்திரமாக கொண்டு வந்து சேர்க்கும் வகையில் உரிய போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு மையங்களில் தேர்வாளர்களுக்கு தேவையான சுத்தமான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தேர்வாளர்கள் முறையாக பின்பற்றி தேர்வினை சிறப்பாக எழுதி பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.வனஜா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**